


கடலூர் சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம்,கடலூர் சுப்புராயலு ரெட்டியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். பகுதி செயலாளர் எஸ்.பி.நடராஜன் வரவேற்புரையாற்றினார். தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி, கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., கடலூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் சுவை.சுரேஷ், மேயர் சுந்தரி ராஜா, மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, ஒன்றிய கழக செயலாளர்கள் தங்க.ஆனந்தன், பி.சுப்பிரமணியன், ஆர்.விஜயசுந்தரம், கே.ஆர்.தனஞ்செயன், மாநகர அவைத் தலைவர் பி.பழனிவேல் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு அரசின் சார்பில், சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் அவர்களின் 166–வது பிறந்தநாளையொட்டி நேற்று (18.2.2025), சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அன்னாரின் திருவுருவப்படத்திற்கு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நலவாரியத் தலைவர் எர்ணாவூர் ஏ.நாராயணன், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர்கள் மு.பா.அன்புச்சோழன் (மக்கள் தொடர்பு), ச.செல்வராஜ் (செய்தி) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### தங்கச்சிமடம் – குந்துகால் – பாம்பன் வடக்கு மீனவக் கிராமங்களில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுக்கு – முதல்வர் ரூ.360 கோடி ஒதுக்கீடு!

# மீனவர் சங்கங்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றிய - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

### இராமநாதபுரம் மாவட்ட நிர்வாகிகள் – முதல்வரை நேரில் சந்தித்து தெரிவித்தனர்!

### இலங்கை கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் கைது – நிரந்தரத் தீர்வு காண வலியுறுத்தல்!

சென்னை, பிப்.19-

**தங்கச்சிமடம் மீன் இறங்கு தளம் மீன்பிடித் துறைமுகமாக தரம் உயர்த்துதல், குந்துகால் மீன் இறங்குதளத்தை தூண்டில் வளைவுடன் மேம்படுத்துதல் மற்றும் பாம்பன் வடக்கு மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு அமைத்தல் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட தமிழ்நாடு அரசின் நிதியிலிருந்து 360 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.**

**இராமநாதபுரம் மாவட்ட மீனவர் சங்கங்களின் நிர்வாகிகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து, தங்களது பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றியதற்காக நன்றி தெரிவித்து, இலங்கைக் கடற்படையால் தமிழ்நாடு மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுத்திட ஒன்றிய அரசை தொடர்ந்து வலியுறுத்தி, இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக் கொண்டு கோரிக்கை மனு அளித்தனர்.**

அதன் விவரம் வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (18.2.2025) தலைமைச் செயலகத்தில், இராமநாதபுரம் மாவட்ட மீனவர் சங்கங்களான இராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவர் சங்க ஆலோசகர் என்.தேவதாஸ் மற்றும் பாய்வா, ஏ.பி.முருகன், தங்கச்சிமடம் அனைத்து விசைப்படகு நாட்டுப்படகு மீனவர் சங்கத்தின் தலைவர் வி.பி. சேசுராஜா, பொருளாளர் ஆர்.சகாயம், இணை செயலாளர் பி. ஆல்வின், பாம்பன் நாட்டுப்படகு மீனவர் நல உரிமைச் சங்கத்தின் தலைவர் எஸ்.பி. ராயப்பன், நிர்வாகி ஆரோக்கிய தீபக், மண்டபம் அனைத்து விசைப்படகு சங்க நிர்வாகிகள் ஜாகீர் உசேன், வாசீம், விஜின் ஆகியோர் சந்தித்து, இலங்கைக் கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதையும், மீனவர்களின் மீன்பிடி படகுகளை பறிமுதல் செய்வதையும் தடுத்திட ஒன்றிய அரசை தொடர்ந்து வலியுறுத்தி, இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக் கொண்டு கோரிக்கை மனு அளித்தனர்.

இராமநாதபுரம் மாவட்ட மீனவப் பிரதிநிதிகளுடனான இச்சந்திப்பின்போது, முதலமைச்சர் அவர்கள், மீனவச் சமுதாய மக்களின் கோரிக்கையினை ஏற்று,

18-8-2023 அன்று மண்டபத்தில் நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில் பங்கேற்றபோது அளிக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்று, அது தொடர்பாக பல்வேறு அறிவிப்புகளை அந்த மாநாட்டிலேயே அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்புகளை நிறைவேற்றும் வகையில், மீனவ மக்களுக்கான கூட்டுறவு கடன் திட்டத்தின் கீழ் 77,402 நபர்களுக்கு 1,198.79 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. 6,242 மீனவர்களுக்கு வீடுகளுக்கான பட்டா வழங்கப்பட்டுள்ளது, மீன்பிடி தடைக்காலத்திற்கான நிவாரணத்தொகை ரூ.8000/மாக உயர்த்தப்பட்டு, 60 வயதிற்கு மேற்பட்ட மீனவர்கள் உட்பட 1.80 இலட்சம் மீனவ குடும்பங்களுக்கு 143 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது, மீன்பிடி படகுகளுக்கான மானிய விலையிலான டீசல் விசைப்படகுகளுக்கு 18,000 லிட்டரிலிருந்து 19,000 லிட்டராகவும், நாட்டுப் படகுகளுக்கு 4,000 லிட்டரிலிருந்து 4,400 லிட்டராகவும் மற்றும் மண்ணெண்ணெய் 3,400 லிட்டரிலிருந்து 3,700 லிட்டராகவும் உயர்த்தப்பட்டு நடப்பாண்டில் வழங்கப்பட்டுள்ளது, மீன்பிடி படகுகளுக்கு 1,000 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன, மீனவர் குழு விபத்துக் காப்புறுதி திட்டம் செயல்பாட்டில் இல்லாத காலகட்டத்தில் இறந்த 205 மீனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் மற்றும் சுழல் நிதியமாக ரூ 3.53 கோடி வழங்கப்பட்டுள்ளது, மீனவர்களுக்கான வீட்டுவசதி திட்டத்தின் கீழ் அலகுத் தொகையானது ரூ. 1.70 இலட்சத்திலிருந்து ரூ. 2.40 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது என்றும்;

அதேபோன்று, இராமநாதபுரம் மாவட்ட மீனவர்களின் முக்கிய கோரிக்கைகளான தங்கச்சிமடம் மீன் இறங்கு தளம் மீன்பிடி துறைமுகமாக தரம் உயர்த்துதல், குந்துகால் மீன் இறங்குதளத்தை தூண்டில் வளைவுடன் மேம்படுத்துதல் மற்றும் பாம்பன் வடக்கு மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு அமைத்தல் ஆகிய திட்ட செயல்பாட்டிற்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும்;

அதன் அடிப்படையில், இதுபோன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்யாத நிலையிலும், தமிழ்நாடு அரசின் நிதியிலிருந்து 360 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து பணிகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

மேலும், மீனவக் கிராமங்களில் கடல் அரிப்பைத் தடுக்கவும், படகுகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் உரிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட ஏதுவாக கடலோர மேலாண்மை திட்ட வரைவு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

மேலும், மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுவதைத் தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஒன்றிய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும், இப்பிரச்சனையில் நிரந்தரத் தீர்வினைக் காண வேண்டுமென்று பலமுறை ஒன்றிய அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளதோடு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை அமைச்சர் அவர்களும், தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து வலியுறுத்தியதோடு, தொடர்ந்து இப்பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்திலும் வலியுறுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

மீனவர்கள் சார்பில், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களிடம் 16.2.2025 அன்று இராமநாதபுரத்தில் அளிக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுடன், தற்போது முதலமைச்சர் அவர்களிடம் இன்றையதினம் அளிக்கப்பட்டுள்ள கோரிக்கைகளையும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கடற்பாசி வளர்த்தல், மதிப்புக்கூட்டிய மீன் பொருட்கள் தயாரித்தல், ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு போன்ற திட்டங்களை செயல்படுத்துவது குறித்தும் விரைந்து பரிசீலிக்க துறை அலுவலர்களை அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மீனவர்களின் உற்ற தோழனாக விளங்கும் திராவிட மாடல் அரசு, தொடர்ந்து மீனவர்களின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து, நிச்சயம் உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்தார்.

இராமநாதபுரம் மாவட்ட மீனவர் சங்க பிரதிநிதிகள், தங்களது பல்வேறு பிரச்சினைகள் மற்றும் கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டுவருவதற்காக தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

இச்சந்திப்பின்போது, மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி கனிமொழி, நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், மாநில மீனவர் அணிச் செயலாளர் டாக்டர் ஜோசப் ஸ்டாலின், துணைச் செயலாளர்கள் ரவிச்சந்திரன், ராமவன்னி, வீ.பொன்னரசு ஆகியோர் உடனிருந்தனர்.

### சண்டிகர் தமிழ்மன்ற கட்டிட விரிவாக்கப் பணிக்கு ரூ.50 லட்சம்!

# தில்லித் தமிழ்ச்சங்க திருவள்ளுவர் கலையரங்கப் பணிக்கு ரூ.50 லட்சம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் காசோலைகள் வழங்கினார்!

சென்னை, பிப். 19 -

**தில்லித் தமிழ்ச் சங்கத்தின் திரு வள்ளுவர் கலையரங்கப் புத்தாக்கப் பணிகளை மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் சண்டிகர் தமிழ் மன்றத்தின் கட்டட விரி வாக்கப் பணிகளை மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தில்லித் தமிழ்ச் சங்கத்தின் திருவள்ளுவர் கலையரங்கப் புத்தாக்கப் பணிகளை மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை தில்லித் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சக்திபெருமாள், துணைத் தலைவர் பி. இராகவன் மற்றும் பொதுச் செயலாளர் இரா. முகுந்தன் ஆகியோரிடம் வழங்கினார். மேலும், சண்டிகர் தமிழ் மன்றத்தின் கட்டட விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை சண்டிகர் தமிழ் மன்றத்தின் பொதுச் செயலாளர் ராஜசேகர், பொருளாளர் சிவசுப்ரமணியம், இணைப் பொருளாளர் குணசேகரன் ஆகியோரிடம் வழங்கினார்.

'நமது தாய்மொழியான தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி, இது உலகில் வேறு எந்த இனத்துக்காவது, தாய்மொழியாக இருந்திருக்குமானால், உலகப் பொது மொழியாகவே ஆகியிருக்கும்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ் மொழியின் சிறப்பினை போற்றினார். இத்தகைய வளமிக்க மொழிக்குச் செம்மொழித் தகுதியைப் பெற்றுத் தந்து, தமிழர்களின் நூற்றாண்டுக் கனவை மெய்யாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். பல்வேறு சூழல் காரணமாக புலம் பெயர்ந்து பிற மாநிலங்களில் வாழும் தமிழர்களின் வருங்காலத் தலைமுறையினர் செம்மொழியாம் தமிழ்மொழியின் சிறப்பையும் செம்மையையும் உணர்ந்து கொள்ளும் வகையிலும், பிற மாநிலத்தவர் தமிழ் மொழியை அறிந்து கொள்ளும் வகையிலும், பண்பாட்டு வேர்களைக் காப்பதற்காகவும் இந்தியாவின் பிற மாநிலங்களில் தமிழ்ச் சங்கங்களை தோற்றுவித்து மொழி, இலக்கியம், கலை, நலத்திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றன. அத்தகையப் பணிகளை மேற்கொண்டு வரும் தமிழ்ச் சங்கங்களை ஊக்குவிக்கும் வண்ணம் தமிழ்நாடு அரசால் தேவையான நிதியுதவிகள் அவ்வப்போது வழங்கப்பட்டு வருகின்றன.

அவ்வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அடியொற்றி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க, 2024 - 2025ஆம் நிதியாண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கையில், "முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் தில்லித் தமிழ்ச் சங்கத்தில் 1997ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட திருவள்ளுவர் கலையரங்கத்தில் தில்லி வாழ் தமிழர்களில் வழித்தோன்றல்கள் பயனுறும் வண்ணம் தமிழ் மொழிப் பயிற்சி, நடனம் மற்றும் இசை வகுப்புகள் நடத்துதல். தமிழ் சார்ந்த கலை, இலக்கிய நிகழ்ச்சிகள், தமிழிணையக் கருத்தரங்குகள் உள்ளிட்ட தமிழ் சார்ந்த நிகழ்வுகள் நடத்திட ஏதுவாக கலையரங்கத்தினைப் புனரமைத்திட தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு ரூபாய் 50 இலட்சம் வழங்கப்படும்" என்றும்,

"சண்டிகர் வாழ் தமிழர்களின் இளந்தலைமுறையினர் தமிழ் மொழியின் சிறப்பினையும் கலைப் பண்பாட்டு விழுமியங்களையும் அறிந்துகொள்ளும் வண்ணம் தமிழ் மொழிப் பயிற்சி, ஆடற்கலை, இசைக்கலை உள்ளிட்ட நுண்கலைகளைப் பயிற்றுவிக்க ஏதுவாக சண்டிகர் தமிழ் மன்றக் கட்டட விரிவாக்கப் பணிகளுக்கு ரூபாய் 50 இலட்சம் வழங்கப்படும்" என்றும், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

இந்த அறிவிப்புகளை செயல்படுத்திடும் வகையில், தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு 50 இலட்சம் ரூபாயும், சண்டிகர் தமிழ் மன்றத்திற்கு 50 இலட்சம் ரூபாயும், என மொத்தம் 1 கோடி ரூபாய் நிதி விடுவித்தும், தமிழ் இணையக் கல்விக் கழகத்துடன் இணைந்து 'அகரம் முதல் சிகரம் வரை' திட்டத்தினை செயல்படுத்தும் வகையிலும் ஆணைகள் வெளியிடப்பட்டு, அதன்படி, தில்லித் தமிழ்ச் சங்கத்தின் திருவள்ளுவர் கலையரங்கப் புத்தாக்கப் பணிகளை மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை

தில்லித் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகிகளுக்கும், சண்டிகர் தமிழ் மன்றத்தின் கட்டட விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை சண்டிகர் தமிழ் மன்றத்தின் நிர்வாகிகளுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் உடனிருந்தனர்.

### சென்னையில் 33 இடங்கள் உட்பட 1,000 இடங்களில் முதல்வர் மருந்தகம்:

# முதல்வர் மு.க.ஸ்டாலின் வரும் 24 ஆம் தேதி திறந்து வைக்கிறார்!

### அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பேட்டி!

சென்னை, பிப். 19 -

*சென்னையில் 33 இடங்கள் உட்பட தமிழ்நாடு முழுவதும் 1,000 இடங்களில் முதல்வர் மருந்தகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வரும் 24ம் தேதி திறந்து வைக்கிறார். பிரதமரின் மக்கள் மருந்தகம் உட்பட எந்த மருந்தகங்களிலும் இல்லாத வகையில் மலிவான விலையில் தரமான மருந்துகள் வழங்கப்படும் என்று அமைச்சர் பெரிய கருப்பன் தெரிவித்துள்ளார்.*

*சென்னையில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகத்தில், "முதல்வர் மருந்தகம்" திறப்பு விழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நேற்று முன்தினம் நடந்தது.*

**அமைச்சர் அளித்த பேட்டி:**

*தமிழ்நாட்டில் 980 மருந்தகங்களுக்கு அனைத்து தகுதிகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு திறக்க தயாராக உள்ளது. மீதமுள்ள மருந்தகங்களிலும் பணிகள் விரைவில் முடியும். முதல்வரின் நேரடி பார்வையில் இந்த மருந்தகங்கள் செயல்பட உள்ளது. கூட்டுறவு சங்கம் மூலம் 500, தொழில் முனைவோர் மூலம் 500 மருந்தகங்கள் என 1000 மருந்தகங்கள் திறக்கப்பட உள்ளது. மதுரையில் 52, கடலூர் 49, கோவை 42, தஞ்சை 40 என முதல்வர் மருந்தகங்கள் அமைய உள்ளது. சென்னையில் 33 முதல்வர் மருந்தகங்கள் அமைக்கப்படுகிறது. முதல்வர் மருந்தகம் திறக்கும் தொழில் முனைவோர்க்கு ரூ.3 லட்சம் வரை அரசு மானியம் வழங்குகிறது. வரும் 24ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 1000 முதல்வர் மருந்தகங்களை திறந்து வைக்கிறார்.*



*மக்கள் நல்வாழ்வுத்துறை மூலம் மருந்துகள் கொள்முதல் செய்யப்படும். தேவை ஏற்பட்டால் வெளிச்சந்தையிலும் மருந்துகள் கொள்முதல் செய்யப்படும். பிரதமர் மருந்தகம் உட்பட எந்த மருந்தகங்களிலும் இல்லாத விதமாக மலிவான விலையில் தரமான மருந்துகள் வழங்கப்படும். விரைவில் காலியாக உள்ள ரேசன் கடை பணியாளர் இடங்கள் நிரப்பப்படும். கூட்டுறவுத் துறை பொருட்களுக்கு ஜி.எஸ்.டி. விலக்கு வழங்க வேண்டும் என ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். ஒன்றிய அரசு எங்கள் கோரிக்கைக்கு மறுப்பும் தெரிவிக்கவில்லை. ஏற்கவும் இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.*

*இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்பொருள் பாதுகாப்புத்துறை அரசு முதன்மைச் செயலாளர் சத்தியபிரத சாகு, கூட்டுறவு சங்கங் களின் பதிவாளர் க.நந்தகுமார், கூடுதல் பதிவாளர் (நுகர்வு பணிகள்) அம்ரித் உட்பட இணைப்பதிவாளர்கள் மற்றும் கூடுதல் பதிவாளர்கள் கலந்து கொண்டனர்.*




நூற்றாண்டுகளுக்கு முன்னர் உயர் வகுப்பாரின் கெடுபிடிகளுக்கு ஆளானவர்கள் கூடித் தங்கள் நலனையும், பாதுகாப்பையும் கருதி, "சென்னை ஐக்கிய சங்கம்" (THE MADRAS UNITED LEAGUE) என்ற அமைப்பைத் தொடங்கி சென்னை ஐக்கிய சங்கத்தின் முதலாம் ஆண்டு விழாவில், அச்சங்கம் "திராவிடச் சங்கம் எனப் பெயர் மாற்றி, "திராவிட மாணவர் விடுதி" (DRAVIDIAN STUDENTS HOSTEL) என்ற பெயரில் விடுதி ஒன்றைத் தொடங்கி, அதன் பின்னர் நீதிக் கட்சி அரசுகளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவச் சட்டம், இந்து சமய அறநிலையப் பாதுகாப்புச் சட்டம், தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் போன்ற முக்கியமான பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு தமிழ்நாட்டு மக்கள் பெரும் பயன் எய்திட வழிவகுத்த திருமகனார் "திராவிட இயக்கத்தின் தந்தை" எனப் போற்றப்படும் டாக்டர் நடேசனார் அவர்களின் 88வது நினைவு நாளினையொட்டி, நேற்று (18.2.2025), காலை, சென்னை, தியாகராயர் நகர் நடேசனார் பூங்காவில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்குட்பட்ட அம்மையார்குப்பம் ஊராட்சியில் அ.தி.மு.க. பேச்சாளர் கன்னியப்பன், திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளரும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தார். உடன், ஒன்றிய கழக செயலாளர்கள் சி.என்.சண்முகம், பெ. பழனி, ப.சம்பத், செங்கோட்டவன், வீரமங்கலம் ம.ரகு, ம.ரமேஷ்,வி.ஜி.மோகன், சரவணன், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.